**D.V.O.P.1 /2017** **24.08.2018**

**ம.சா.1.சுவேதா**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனக்கு 15 வயது இருக்கும்போது எதிர்மனுதாரருடன் திருமணம் நடந்திருப்பதால் நான் மனைவி என்ற முறையில் எதிர்மனுதாரருடன் பராமறிப்பு தொகையோ குடியிருப்பு உரிமையோ பெற தகுதியில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பெயரில் உள்ள வீட்டின் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. நான் எனக்கு சொந்தமான நகைகளை தனியார் வட்டிக்கடையில் நான் அடகு வைத்து கடன் வாங்கிய நகைகளை எனது தந்தை திருப்பிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் எனக்கு சொந்தமான நகைகளை அடகு வைத்து வந்த தொகையையும் நாங்கள் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் எதிர்மனுதாரர் சம்பாதித்துக்கொடுத்த தொகையும் ஆடம்பரமான செலவு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் கர்நாடகாவில் தான் வசித்து வருகிறார் என்பதற்கு எனது சகோதரரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எனக்கு சீதனமாக கொடுக்கப்பட்டுள்ள பொருட்கள் உத்தப்பநாயக்கனூரில் உள்ள என் பெற்றோர் வீட்டில் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது பெற்றோர் என்ன என்ன பொருட்கள் சீதனமாக கொடுத்தார்கள் என்ற விபரத்தை மனுவில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் உள்ளோம். என் பெற்றோர் தோட்டத்தில் மல்லிகை பூ விவசாயம் செய்து அடிக்கடி உசிலம்பட்டியில் வந்து விற்றுவிட்டு செல்வேன் என்றால் எனது அப்பா தான் விவசாயம் செய்துள்ளார் நான் கூலிக்காக பூவை கொண்டு வந்து விற்றுவிட்டு செல்வேன். அந்த பூ விற்ற பணத்தை தினமும் என் தந்தையிடம் கொடுத்துவிடுவேனா என்றால் அவர் மாதம் ஒரு முறை வந்து வாங்கிச்செல்வார். எனக்கு உச்சப்பட்டியை சேர்ந்த முத்துராமலிங்கம் என்ற பேருந்து ஓட்டுநரை தெரியுமா என்றால் தெரியாது. நான் அடிக்கடி உசிலம்பட்டிக்கு ஹரிவேல்முருகன் பேருந்தில் வரும்போது அவரோடு எனக்கு தவறான பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் நகை அடகு வைத்து வாங்கிய பணத்தை முத்துராமலிங்கத்திடம் தான் கொடுத்துவிட்டேன் என்றால் அவரை யார் என்றே எனக்கு தெரியாது. நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தால் என் இஷ்டப்படி இருக்கமுடியாது என்று நான் தான் எதிர்மனுதாரரை என் பெற்றோர் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் போலக்காப்பட்டியில் இருக்கும்போது தான் கோபித்துக்கொண்டு வந்தேன். எதிர்மனுதாரர் என்னை சந்தேகப்பட்டு பேசுவதாகவும் கப்பலூரில் பல பெண்களிடம் தவறாக உறவு வைத்திருப்பதாகவும் மது அருந்துவதாகவும் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு மனஉலைச்சலை ஏற்படுத்தி அவமானப்படுத்த வேண்டுமென்பதற்காக தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. யார் யார் மூலம் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ பேச்சு வார்த்தை நடத்தினேன் என்று மனுவில் குறிப்பாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எங்களுக்கு இடையில் சமரசம் பேசிய நபரை

இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் எந்த ஒரு காலத்திலும் சேர்ந்து வாழ முயற்ச்சிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த மனு தாக்கல் செய்வதற்கு நான் தான் விபரம் சொன்னேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் மனுவில் எழுதப்பட்டிருந்த விபரங்களை என்னிடம் படித்து காண்பித்தாரா என்றால் படித்து காண்பித்தார். இந்த மனுவில் நான் சிறிது காலம் எதிர்மனுதாரருடன் பிரச்சினை செய்யாமல் வாழ்ந்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் எதிர்மனுதாரரை அவருடைய பெற்றோரை பார்க்ககூடாது என்றும் அங்கு அவர்களுக்கு விவசாய வேலை எதுவும் செய்து கொடுக்க கூடாது என்றும் தொடர்ந்து பிரச்சினை செய்துவந்தேன் என்றால் சரியல்ல. நான் தொடர்ந்து பிரச்சினை செய்து விசேசம் வைத்த பிறகு என்னுடைய பெற்றோர் வீட்டில் நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரியல்ல. எனது குழந்தைகள் பள்ளி பேருந்தில் செல்வதற்கு கட்டிய கட்டண ரசீதுகள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நான் இளவராக இருக்கும்போதே திருமணம் செய்துவிட்டதால் இந்த மனுவை தாக்கல் செய்ய எனக்கு தகுதியில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி:

இல்லை.